

நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சகம், சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் அமைச்சகம் கேபினட் அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை நேற்று (12.02.2025) புதுதில்லி சுற்றுசூழல் அமைச்சகத்தில் சந்தித்துப் பேசினார். இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, உடனிருந்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய நகர – பகுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் களுக்கான நடைபெற்ற அறிமுகக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றினார். அருகில் கழக இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் சத்தியபிரபு மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் உள்ளனர்.

### கூடுதலாக மாநில வல்லுநர் மதிப்பீட்டுக்குழு அமைக்க அனுமதி மற்றும்

# தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதி அளித்திடுக!

## ஒன்றிய அமைச்சரிடம் – அமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கை!

புதுடெல்லி, பிப்.13-

தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதியுதவி கோரி ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களிடம் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கோரிக்கை மனு அளித்தார்.

தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (12.02.2025), புதுதில்லியில், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் அவர்களை சந்தித்து, தமிழ்நாடு அரசின் பல திட்டங்களுக்கு அனுமதி மற்றும் நிதி கோரி கோரிக்கை மனு அளித்தார். இந்நிகழ்வின் போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு உடனிருந்தார்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், 1,50,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட தொழில்துறை கொட்டகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று அறிவிப்பை வெளியிட்டமைக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்ததுடன், ஏப்ரல் 2025 உடன் முடிவுக்கு வரவுள்ள, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் (SEIAA) மற்றும் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு (SEAC) ஆகிய வற்றின் மறுசீரமைப்புக்கான அரசின் முன்மொழிவின் மீது விரைந்து அறிவிக்கை வெளியிடுமாறும் நிதி யமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விரைவான அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக ஒரு கூடுதல் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு (SEAC 2) அமைக்க ஏற்கெனவே அமைச்சகத்திற்கு தமிழ்நாடு அரசு கருத்துருவை சமர்ப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த முன்மொழிவுக்கு விரைந்து அனுமதி வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் உறுதியளித்தார்கள்.

### தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோரத்தை மேம்படுத்துதல்!

மேலும், இக்கலந்துரையாடலின் போது, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பசுமைக் கவசத்தை உருவாக்குவதற்கான புதிய திட்டத்திற்கு காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டம் மற்றும் பசுமை இந்தியா இயக்கம் ஆகியவற்றின் கீழ் ரூ.27.53 கோடிக்கு அனுமதி வழங்குமாறு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை அமைச்சகத்திடம் கோரப்பட்டது. இத்திட்டம் இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மாவட்டத்தில் பல கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியிலிருந்து, தெங்குமரஹாடா கிராமத்தில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு தேவைப்படும் ரூ.74.4 கோடி ரூபாயை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணைய (CAMPA) நிதியிலிருந்து வழங்கக்கோரி தமிழ்நாடு அரசு கருத்துரு சமர்ப்பித்துள்ளது. அந்தப் பகுதியில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவ த்தையும், அடிக்கடி ஏற்படும் மனித வனவிலங்கு மோதல்கள் உள்ளூர் சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பதையும் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

### ஒன்றிய அமைச்சர் ஆதரவு!

கோரிக்கை மனுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாநில அரசின் முயற்சிக ளுக்கு தனது அமைச்சகத்தின் ஆதரவை வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்கள். இந்த சந்திப்பின் போது ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சகத்தின் செயலாளர் தன்மய் குமார் மற்றும் கூடுதல் செயலாளர் நரேஷ் பால் கங்வார் மற்றும் வனத்துறை டைரக்டர் ஜெனரல் சுஷில் குமார் அவஸ்தி ஆகியோர் உடனிருந்தனர்.

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவிப்பு

.கடலூர், பிப். 13 -

முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு 21.02. 2025 வெள்ளிக்கிழமை, 22.02. 2025 சனிக்கிழமை அன்று வருகையையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் உள்ள ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது என அமைச்சர், மாவட்டச் செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

கீழ்காணும் பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ளது. அது சமயம் சம்மந்தபட்ட இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேதி, நேரம், சட்டமன்றத் தொகுதி, இடம், கலந்து கொள்ளும் ஒன்றியம் - நகரம் - பகுதி - பேரூர் வருமாறு:

இன்று (13.02.2025 வியாழக்கிழமை), மாலை 03.00 மணி, குறிஞ்சிப்பாடி தொகுதி திமுக அலுவலகம் குறிஞ்சிப்பாடி, குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், வடலூர் நகரம், குறிஞ்சிப்பாடி பேரூர், கடலூர் கிழக்கு ஒன்றியம், கடலூர் மேற்கு ஒன்றியம்.



**13.02.2025** வியாழக்கிழமை, மாலை 05.00 மணி, புவனகிரி தொகுதி, KKS திருமண மண்டபம், தீப்பாஞ்சநாச்சியார் கோயில் அருகில் அள்ளூர், சேத்தியாதோப்பு, கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கம்மாபுரம் வடக்கு ஒன்றியம், கம்மாபுரம் மத்தி ஒன்றியம், கெங்கைகொண்டான் பேரூர், புவனகிரி மேற்கு ஒன்றியம், சேத்தியாதோப்பு பேரூர், புவனகிரி கிழக்கு ஒன்றியம், புவனகிரி பேரூர், கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம், கீரப்பாளை யம் மேற்கு ஒன்றியம், திருமுட்டம் வடக்கு ஒன்றியம்

**16.02.2025** ஞாயிற்றுக்கிழமை, காலை 10.00 மணி, சிதம்பரம் தொகுதி, GM வாண்டையார் திருமண மண்டபம் சிதம்பரம்,

சிதம்பரம் நகரம், பரங்கிபேட்டை வடக்கு ஒன்றியம், பரங்கிபேட்டை பேரூர், பரங்கிபேட்டை தெற்கு ஒன்றியம், கிள்ளை பேரூர், குமராட்சி கிழக்கு ஒன்றியம், அண்ணாமலைநகர் பேரூர், குமராட்சி மத்தி ஒன்றியம், புவனகிரி கிழக்கு ஒன்றியம்

16.02.2025 ஞாயிற்றுக்கிழமை, மாலை 04.00 மணி, காட்டுமன்னார் கோயில் தொகுதி, கிருஷ்ணா திருமண மண்டபம் காட்டுமன்னார்கோயில், காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார் கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர், திருமுட்டம் மேற்கு ஒன்றியம், குமராட்சி தெற்கு ஒன்றியம், லால்பேட்டை பேரூர், குமராட்சி வடக்கு ஒன்றியம், குமராட்சி மேற்கு ஒன்றியம், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம்

17.02.2025 திங்கட்கிழமை, மாலை 03.00, மணி, கடலூர் தொகுதி, சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபம் கடலூர்

கடலூர் மாநரகம், மஞ்சக்குப்பம் பகுதி, திருப்பாதிபுலியூர் பகுதி, புதுபாளையம் பகுதி, துறைமுகம் பகுதி, கடலூர் வடக்கு ஒன்றியம், கடலூர் தெற்கு ஒன்றியம்

இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.


